தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை.600 006

ந.க.எண். 13368/எல்1/2011, நாள் .1.2012

-----

பொருள் .. தொடக்கக் கல்வி – ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் – தொடக்கக் கல்வித்துறையில் பணியாற்றிய தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு 1.6.88க்கு முன்பு இடைநிலையாசிரியர்களாகவும், தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர்களாகவும் பணியாற்றிய மொத்த பணிக்காலத்தை 01.06.88க்கு பின்னர் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த காலத்துடன் சேர்த்து தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் பணியில் தேர்வுநிலை / சிறப்புநிலை அனுமதித்தல் தொடர்பாக.

பார்வை .. அரசாணை (நிலை) எண. 216/பள்ளிக்கல்வி (ஜி2) துறை, நாள் 30.12.2011.

---

தொடக்கக் கல்வித்துறைக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளில் 01.06.88க்கு முன்பு இடைநிலையாசிரியர்களாகவும், தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களாகவும் பணியாற்றிய மொத்த பணிக்காலத்தையும் கணக்கிட்டு 01.06.088க்கு பின்னர் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர்களாக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த காலத்துடன் சேர்த்து தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பதவியில் தேர்வுநிலை / சிறப்புநிலை அனுமதிக்கவும், இந்நிகழ்வில் வழக்குத் தொடுத்து தீர்ப்பாணை பெற்றவர்கள், வழக்கு தொடுத்து தீர்ப்பாணை பெறாதவர்கள் மற்றும் வழக்கு தொடுக்காதவர்கள் ஆகிய அனைவரும் பயன்பெறும் வகையில் பார்வையிற்கண்ட அரசாணை வெளியிடப்பட்டு ஊதிய நிர்ணயம் செய்ய தொடக்கக்கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காண் அரசாணையினை நடைமுறைப்படுத்த கீழ்க்கண்ட அறிவுரைகளை தவறாது பின்பற்றப்படல்வேண்டும் என அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. தகுதிவாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து உரிய விண்ணப்பங்களை (மாதிரிப்படிவம் இணைக்கப்பட்டுள்ளது) மூன்று நகல்களில் 31.01.2012க்குள் சார்ந்த உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் பெறப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அலுவலகத்தில் பெறப்பட்ட நாளுக்கான அத்தாட்சி இருத்தல் வேண்டும்.
2. மேற்காண் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் விதிகளின்படி உரிய அசல் சான்றிதழ்களின் அடிப்படையில் ஆய்வு செய்து உரிய ஆவணங்களுடன் 29.02.2012க்குள் இரண்டு நகல்களை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைப்பு செய்தல் வேண்டும்.
3. மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஒன்றியம் வாரியாக பெறப்பட்ட விண்ணப்பங்களை பார்வையில் காணும் அரசாணையின் அடிப்படையில் பரிசீலனை செய்து தமது பரிந்துரையுடன் (ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம் எனத் தெரிவித்து) 31.03.2012ஆம் நாளுக்குள் தொடக்கக் கல்வி இயக்குநரகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.
4. மாவட்டத் தொடக்க கல்வி அலுவலர், இப்பணிக்காக தனியாக ஒரு குழுவை நியமித்துக்கொள்ளலாம். இதற்கென ஒரு பதிவேடு பேணப்படவேண்டும்.

இப்பணியானது இயக்குநர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் மேற்கொள்ள இருப்பதால், சார்நிலை அலுவலர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட அறிவுறுத்தப்படுகிறார்கள். உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஊதிய நிர்ணயம் சார்பாக ஏதேனும் சந்தேகம் ஏற்படின் சார்ந்த மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலரின் ஆலோசனை பெற்று செயல்படுதல் வேண்டும். ஊதிய நிர்ணயம் செய்வது மற்றும் உரிய விதிகளை பின்பற்றாமல் செயல்படுவது போன்றவற்றில் தவறு ஏற்படும் பட்சத்தில் அதற்கு சம்பந்தப்பட்ட உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களே பொறுப்பேற்க நேரிடும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு தொடக்கக் கல்வி இயக்குநரின் ஒப்புதல் பெற்றபின்னரே தொகை விடுவிப்பு செய்தல் வேண்டும் எனவும் மீண்டும் அறிவுறுத்தலாகிறது.

இந்நிலையில், இவ்வாசிரியர்களுக்கு கணக்கீட்டுத்தாள் தயார் செய்யும்பொழுது மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும். நிலுவைத் தொகையில் ஏதேனும் கூடுதலோ அல்லது குறைவோ ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். தவறு ஏற்படும் பட்சத்தில் நிலுவை தொகை வழங்க வீண் காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இதனை கவனத்தில் கொண்டு, துல்லியமாக கணக்கீடு செய்து கருத்துருவினை பணிந்தனுப்ப உரிய விரைவு நடவடிக்கையை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், உதவித் தொடக்கக் கல்வி அலுவலகத்தில் இது சார்ந்து தனி ஏடு பேணப்படவேண்டும். கருவூலத்தில் பட்டியல் சமர்ப்பிப்பதற்கு முன்பு அலுவலக நகல் தயார் செய்து அதனைத் தவறாது அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திட வேண்டும்.

இச்செய்தியை தகுதியுள்ள ஆசிரியர்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் அலுவலக தகவல் பலகைகளிலும் குறு வள மையத்திலும் அறியும் வண்ணம் செய்தல் வேண்டும். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் அனைவரும் அறியும் வண்ணம் தகவல் அளிக்க வேண்டும் எனவும் அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக் கல்வி இயக்குநர்.

இணைப்பு – படிவம்

பெறுநர்
அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

நகல் கூடுதல் தலைமைச்செயலர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை.9 அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
நகல் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சங்கங்கள்.

“உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்” - 394

<u>படிவம்</u>

<u>அரசு ஆணை 216 பள்ளிக் கல்வி (ஜி2) துறை நாள். 31.12.2012ன்படி</u>
<u>உரிய நிலுவை பெற்று வழங்குவதற்கான சுயவிவரப்படிவம்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆசிரியரின் பெயர் மற்றும் தற்போதைய பணிபுரியும் பள்ளி | .. | |
| 2. | 01.06.88 அன்று பணியாற்றிய பள்ளி | .. | |
| 3. | இடைநிலை ஆசிரியர் பணியில் சேர்ந்த நாள் | | |
| 4. | 01.06.88ல் வகித்த பதவி | .. | |
| 5. | இடைநிலை ஆசிரியர் பணியில் தேர்வுநிலை பெற்ற நாள் | .. | |
| 6. | இடைநிலை ஆசிரியர் பணியில் சிறப்புநிலை பெற்ற நாள் | .. | |
| 7. | 31.5.88 அன்று கடைசியாக பெற்ற ஊதியம் / ஊதிய விகிதம் | .. | |
| 8. | இடைநிலை ஆசிரியர் பணி மற்றும் தொடக்கப் பள்ளி தலைமையாச ரியர் பணி சேர்த்து தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியில் தேர்வுநிலை / சிறப்புநிலை வழங்கப்படவேண்டிய நாள். | | |
| 9. | தொடக்கப்பள்ளி தலைமையாச ரியர் பணியில் தேர்வுநிலை / சிறப்புநிலை வழங்கியபின் ஊதிய நிர்ணயம் மற்றும் ஊதிய விகிதம். | | |
| 10. | பணி முறிவு காலம் ஏதேனும் உள்ளதா ? இருப்பின் அதன் விவரம் | | |
| 11. | பணி ஓய்வு பெற்ற நாள் | | |
| 12. | பணியாளர் கையொப்பம் | | |
| 13 | உத்தேசமாக மனுதாரருக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை விவரம் | | |
| 14. | உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் / கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலரின் பரிந்துரை | | |

<u>சான்று</u>

1. தேர்வுநிலை/ சிறப்புநிலை ஊதிய நிர்ணயம் தொடர்பாக, சம்பந்தப்பட்ட ஆசிரியரின் பணிப்பதிவேட்டுடன் என்னால் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட பின்னரே, இவ்வாசிரியருக்கு ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

2. இந்த ஊதியத்தினை இதற்கு முன் பெற்று வழங்கப்படவில்லை என சான்றளிக்கப்படுகிறது.

உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் /
கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்.

மேலொப்பம் செய்யப்படுகிறது.

மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்.